# திருக்குறளில் சொல்இலக்கணக் கோட்பாடுகள்

மதுரை காமராசர் பல்கலைக்கழக முனைவர் **(Ph.D.,)**
பட்டத்திற்காக அளிக்கப்பெறும் ஆய்வேட்டின் ஆய்வுச்சுருக்கம்
**(Synopsis)**


ஆய்வாளர்

**பா. கார்த்திகைச்செல்வி** எம்.ஏ., எம்.ஃ.பில்.,

**பதிவுஎண் : P3536** (பகுதிநேரம்)

நெறியாளர்

**முனைவர் சு. சந்திரா** எம்.ஏ., எம்.ஃ.பில்., பிஎச்.டி.,
டிஜிடி., பிஜிடிஜேஎம்சி., டிப்.யோகா., டிப்.சைவசித்தாந்தம்,
டிப்.சீக்கியம், எம்.ஏ., (தத்துவம் & சமயம்)

இணைப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
ஸ்ரீமீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)
மதுரை – 625 002



**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

**மதுரை**

**டிசம்பர் 2019**

# திருக்குறளில் சொல்இலக்கணக் கோட்பாடுகள்

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழி, ‘செம்மொழித்’ தகுதி பெற்று உலகோர் அனைவராலும் போற்றுதற்கு உரியதாக இருப்பதற்கு, அதன் இலக்கிய, இலக்கண வளங்களும் ஒரு காரணம் எனில் மிகையாகாது. தமிழின் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணக் கூறுகள், இன்றைய மொழியியல் ஆய்வாளர்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக அமைந்துள்ளன. ஏழுசீர்களில் அமைந்த குறள் வெண்பாவில் உலகம் முழுமைக்கும் தேவைப்படும் ஒப்பற்ற கருத்துகளைத் தன்னகத்தே கொண்டது ‘திருக்குறள்’ ஆகும். தொல்காப்பியம் சுட்டும் சொல் இலக்கணக் கோட்பாடுகள் திருக்குறளில் உள் சொற்களில் பொருந்தும் விதத்தை இவ்வாய்வு நோக்குகிறது.

**ஆய்வுத்தலைப்பு**

தொல்காப்பியத்திலும், திருக்குறளிலும் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், சொல்லாடல் திறனில் சிறந்த திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் சொல்இலக்கணக் கோட்பாடுகள் குறித்த ஆய்வுகள் முனைவர் பட்ட அளவில் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் **“திருக்குறளில் சொல்இலக்கணக் கோட்பாடுகள்”** என்பது ஆய்வுத்தலைப்பாக அமைகிறது.

**ஆய்வின் கருதுகோள்**

தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் இடையிலான காலஇடைவெளி மிகக்குறைந்த அளவே என்பதால், தொல்காப்பியம் கூறும் சொல்இலக்கணக் கோட்பாடுகளைத் திருக்குறளில் பொருத்திக் காண இடமுள்ளது. சொல் நிலையில் தொல்காப்பியம் சுட்டும் கோட்பாடுகள் அனைத்தும் திருக்குறளில் அமைந்துள்ள விதம், தொல்காப்பியக் கோட்பாட்டிலிருந்து மாறுபட்ட இடங்கள்,

செய்யப்பட்ட மாற்றங்கள், காலமாற்றத்தினால் உண்டான புதுமைகள் ஆகியவற்றைக் கண்டறிவது ஆய்வின் கருதுகோளாகிறது.

**ஆய்வு நோக்கம்**

தொல்காப்பியர் தொலைநோக்குப் பார்வை கொண்ட மிகச்சிறந்த இலக்கண அறிஞர். பேச்சுவழக்கு, எழுத்துவழக்கு என இரண்டு நிலைகளிலும் தன் கொள்கைகளைத் தெளிவாக அறிவுறுத்தியவர். வள்ளுவர் தனது கருத்துகளைப் புலப்படுத்தும் 'புலப்பாட்டு நெறி'யில் (Rhetoric) வல்லவர். திருக்குறளில் தமிழ் மரபிலக்கணக் கூறுகள் பொருந்தியும், மீறியும் அமைவதனை உரைகள் வழி அறியமுடிகிறது. அவ்வகையில் திருக்குறள் முழுவதிலும் இடம்பெற்றுள்ள சொல்இலக்கணக் கோட்பாடுகளை ஆராய்ந்தறிவது இவ்வாய்வின் நோக்கமாக உள்ளது.

**ஆய்வு எல்லை**

திருக்குறளின் ஆயிரத்து முந்நூற்று முப்பது (1330) குறட்பாக்கள் ஆய்வின் எல்லையாக அமைகின்றன

**ஆய்வு அணுகுமுறை**

குறள்களின் கருத்துகளையும், தொல்காப்பியக் கோட்பாடுகளையும் அறிந்து கொள்வதற்கு விளக்கமுறை ஆய்வும் (Descriptive Criticism), ஒரே தன்மையுடைய அல்லது வேறுபட்ட தன்மை கொண்ட கருத்துக்களை இனம்கண்டு கூறுவதற்குப் பகுப்புமுறை ஆய்வும் (Analytical Criticism), கையாளப்படுகிறது.

தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடு திருக்குறளில் பயின்றுவரும் முறைகளையும், வேறுபடும் இடங்களையும் இனங்கண்டு சுட்டுவது ஆய்வின் நெறியாகிறது. அதாவது தொல்காப்பியம் திருக்குறள் என்ற இரு

நூல்களும் ஒப்பாய்வு அடிப்படையில் நோக்கப்படுகின்ற நெறிமுறை (Methodology) ஆய்வில் மேற்கொள்ளப்படுகிறது.

**முதன்மைச் சான்றாதாரங்கள்**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளான **திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்** எனும் நூலும், **தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையம்** என்ற நூலும் இவ்ஆய்விற்கு உரிய முதன்மை ஆதாரங்களாகும். ஆய்வு முழுவதிலும் குறிப்பிடப்பெற்றுள்ள குறள் எண்களும், நூற்பா எண்களும் முதன்மை ஆதாரங்களின் அடிப்படையில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

**துணைமை ஆதாரங்கள்**

திருப்பனந்தாள் மடம் வெளியிட்ட திருக்குறள் உரைக்கொத்து மூன்று தொகுதிகளும், தருமபுர ஆதீனம் வெளியிட்ட திருக்குறள் உரைவளம் மூன்று தொகுதிகளும், மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை வெளியிட்ட திருக்குறள் உரைக் களஞ்சியங்களும், தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் எழுதிய உரைகளும், செ.வை. சண்முகம் அவர்களின் சொல்லிலக்கணக் கோட்பாடு மூன்று தொகுதிகளும், திருக்குறள், தொல்காப்பியம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், அகராதிகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் போன்றவையும் இவ்வாய்விற்கான துணைமை ஆதாரங்களாகும். திருக்குறள் மற்றும் தொல்காப்பிய உரைகளின் பிற பதிப்புகள் ஆய்வுக்காக ஆங்காங்கே நோக்கப்படுகின்றன.

**ஆய்வு முன்னோடிகள்**

திருக்குறள் பற்றிய பல்வேறு வகையான ஆய்வுகள் இதுவரை வந்துள்ளன.

முனைவர் கு. மோகனராசுவின் ‘தொல்காப்பியமும் திருக்குறளும் ஓர் ஒப்பாய்வு’, திருநாவுக்கரசு முதலியாரின் ‘திருக்குறள் இலக்கண இலக்கியத் திறவுகோல்’, முனைவர். பழ. முத்தப்பனின் ‘திருக்குறளில் சொல்இலக்கணக் கோட்பாடு’ எனும் கருத்தரங்க ஆய்வுக்கட்டுரை ஆகியன இவ்வாய்விற்கான முன்னோடி ஆய்வுகளாகும்.

**ஆய்வுப்பயன்**

இலக்கியங்களிலிருந்து இலக்கணம் எழுகிறது என்பர். தொல்காப்பிய இலக்கணக் கோட்பாடு திருக்குறளாகிய இலக்கியத்தில் பொருந்துமாற்றை இனம் காணும் இந்த ஆய்வு முயற்சி இலக்கண, இலக்கிய உறவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடுகள்; திருக்குறளில் பொருந்தியிருக்கின்றன, சில வேறுபடுகின்றன. இவ்விரு முறைமையும் பின்னைய இலக்கியங்களுக்கு முன்னோடியாக அமைவதோடு மட்டுமல்லாமல், மொழி வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளன. பின்னைய இலக்கண நூல்களின் மாறுபடுகின்ற கூறுகளுக்குத் திருக்குறள் எனும் இலக்கியமும் ஒரு காரணம் எனலாம். மேலும் சங்க இலக்கியத்திற்குப் பின்னும் சங்கம் மருவிய கால இலக்கியங்களுக்கு முன்னும் திருக்குறளின் காலம் அமைகிறது என்ற முடிவிற்கு இந்த ஆய்வு வலிமை சேர்ப்பது ஆய்வின் பயனாகும். மேலும், வள்ளுவரின் சொற்பயன்பாடு செறிவாகவும், அதே போழ்து எளிமையாகவும் விளங்கும் புலப்பாட்டு நெறி குறளின் வெற்றிக்கு முதன்மைக்காரணமாக உள்ளமையும் பெறப்படுகிறது.

**ஆய்வேட்டின் பகுப்புமுறை**

இவ்வாய்வேடு, முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஆறு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் அமைந்துள்ள இயல்களின் அமைப்புமுறை அடிப்படையில் இயல்கள் அமைந்துள்ளன. அவையாவன,

முன்னுரை

1. தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடுகள்
2. திருக்குறளில் வேற்றுமைகள்
3. திருக்குறளில் பெயர்ச்சொற்கள்
4. திருக்குறளில் வினைச்சொற்கள்
5. திருக்குறளில் இடை, உரிச்சொற்கள்
6. தொல்காப்பியரின் எச்சவியல் கோட்பாடும் திருக்குறளும்

முடிவுரை என்பனவாகும். இவற்றை அடுத்துத் துணைநூற்பட்டியலும், பின்னிணைப்புகளும் இடம்பெறுகின்றன.

**முன்னுரை** என்னும் பகுதியில் ஆய்வுத்தலைப்பு, ஆய்வின் கருதுகோள், ஆய்வு நோக்கம், ஆய்வுப்பயன், ஆய்வு அணுகுமுறை, முதன்மை மற்றும் துணைமைச் சான்றாதாரங்கள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வேட்டின் பகுப்புமுறை ஆகியன எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடுகள்** எனும் முதல் இயலில் தொல்காப்பிய இயல்களின் அமைப்புமுறை, சொற்களின் இலக்கணம், பெயர், வினை, இடை, உரி முதலிய முதன்மைச்சொற்களின் பாகுபாடு, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் முதலிய பிறசொற்களின் பாகுபாடுகள் விளக்கப்பட்டுள்ளன.

பெயர்ச்சொல்லின் பகுப்புகளான உயர்திணை, அஃறிணை, விரவுத்திணை ஆகியவற்றின் உட்பகுப்புகள் குறித்த கருத்துகள் மற்றும் ஆகுபெயர் பற்றிய தொல்காப்பியக் கோட்பாடுகள் விளக்கமுறுகின்றன. வினைச்சொல்லின் பகுப்புகளான, தன்மை, முன்னிலை, படர்க்கை, குறிப்பு, வியங்கோள் வினைமுற்றுகள், பெயரெச்சம் மற்றும் வினையெச்சங்கள் குறித்தும், பெயர், வினையைச் சார்ந்துவரும் இடைச்சொற்களின் தன்மைகள், தொல்காப்பியர்

குறிப்பிடும் இடைச்சொற்கள் குறித்த கருத்துகள், தொல்காப்பியம் சுட்டும் உரிச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் போன்றன விளக்கப்பட்டுள்ளன.

பெயரின் பொருளை வேறுபடுத்தும் வேற்றுமை குறித்த செய்திகள் வேற்றுமையின் வகைகள், வேற்றுமைகள் உணர்த்தும் பொருள்கள், வேற்றுமை மயக்கம், வேற்றுமை உருபுகளின் இயல்புகள், செய்யுள் விகாரங்கள், அடுக்குத்தொடர், தொகைமொழிகள், பத்து வகையான எச்சங்கள் குறித்த தொல்காப்பியரின் கோட்பாட்டினைத் தொகுத்துரைப்பதாக இவ்வியல் அமைந்துள்ளது.

**திருக்குறளில் வேற்றுமைகள்** எனும் இரண்டாவது இயலில், இரண்டு முதல் எட்டாம் வேற்றுமை வரை திருக்குறளில் அமைந்துள்ள விதம் ஆராயப்படுகிறது.

தொல்காப்பியர் குறிப்பிடும் இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைகள் திருக்குறளில் பயின்றுவரும் விதம், தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டு, திருக்குறளில் இடம்பெறாத இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைகள், தொல்காப்பியத்தில் சுட்டப்படாத இரண்டாம் வேற்றுமைப் பொருண்மைகள் திருக்குறளில் பயின்றுவரும் முறை குறித்த செய்திகள் விளக்கப்படுகின்றன.

மூன்றாம் வேற்றுமைப் பொருண்மைகளான கருவி, வினைமுதல், உடனிகழ்ச்சி முதலியன திருக்குறளில் அமைந்து வரும் தன்மை, இம்மூன்று வகைகளுக்கும் உட்படாத பிற பொருண்மைகளில் திருக்குறளில் இடம்பெறும் மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆராயப்பட்டுள்ளன.

நான்காம் வேற்றுமை உருபு உணர்த்தும் எண்வகைப் பொருண்மைகள் திருக்குறளில் அமையும்விதம், திருக்குறளில் நான்காம் வேற்றுமை உருபு உணர்த்தும் பிறபொருண்மைகள் என்பவை உணர்த்தப்பட்டுள்ளன.

ஐந்தாம் வேற்றுமைக்குரிய நான்கு பொருண்மைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ள பான்மையும், தற்கிழமை, பிறிதின்கிழமைப் பொருள்களில் ஆறாம் வேற்றுமை திருக்குறளில் பயின்றுவரும் முறையும் நோக்கப்படுகின்றன.

தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழாம் வேற்றுமை உருபுகள் திருக்குறளில் பயின்றுவரும் விதம், தொல்காப்பியத்தில் சுட்டப்பட்டு, திருக்குறளில் இடம்பெறாத ஏழாம் வேற்றுமை உருபுகள், தொல்காப்பியத்தில் சுட்டப்படாத ஏழாம் வேற்றுமை உருபுகள் திருக்குறளில் பயின்றுவரும் முறை குறித்த செய்திகள், திருக்குறளில் விளி ஏற்கும் பெயர்கள் மற்றும் திருக்குறளில் அமைந்துள்ள வேற்றுமை மயக்கங்கள் ஆகியன இவ்வியலில் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

**திருக்குறளில் பெயர்ச்சொற்கள்** எனும் மூன்றாவது இயலில் வினாப்பெயர்கள், இடப்பெயர்கள், பொதுப்பெயர்கள், ஒப்பின்பெயர், குடி, குழுப்பெயர்கள், வினைப்பெயர், வினையாலணையும் பெயர்கள், தொழிற்பெயர்கள், பண்புகொள்பெயர்கள், தொழில் அடிப்படையிலான உயர்திணைப் பெயர்கள், பல்லோர்க் குறித்த திணைநிலைப் பெயர்கள், பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயர்கள், கூடிவரும் வழக்கின் ஆடியற்பெயர்கள், எண்ணியற்பெயர்கள், பிற உயர்திணைப் பெயர்கள் என்ற பகுப்பினுள் அமைந்த உயர்திணைப் பெயர்கள் ஆராயப்பட்டுள்ளன.

சுட்டுப்பெயர்கள், வினாப்பெயர்கள், வினைப்பெயர்க் கிளவி, தொழில் அடிப்படையிலான அஃறிணைப்பெயர்கள், எண்ணுக்குறிப் பெயர்கள், பொருள், இடம், காலம், சினை, குணம் என்ற பகுப்பிற்குட்பட்ட அஃறிணை இயற்பெயர்கள் திருக்குறளில் அமையும் தன்மை விளக்கப்பட்டுள்ளது.

விரவுப்பெயர்கள், ‘சினைப்பெயர், சினைமுதற்பெயர், முறைப்பெயர், பொதுப்பெயர்’ என்ற பகுப்பில் திருக்குறளில் பயின்றுவரும் விதமும், தொல்காப்பியரும், தொல்காப்பிய உரையாசிரியர்களும் சுட்டிய ஆகுபெயர்கள்,

திருக்குறள் உரையாசிரியர்களால் குறிப்பிடப்பெறும் ஆகுபெயர்கள் ஆகியன திருக்குறளில் பயின்று வரும் முறைமை குறித்த செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

**திருக்குறளில் வினைச்சொற்கள்** எனும் நான்காவது இயலில், 'தன்மை ஒருமை வினைமுற்று, தன்மைப் பன்மை வினைமுற்று, படர்க்கை ஒருமை வினைமுற்று, படர்க்கைப் பன்மை வினைமுற்று, உயர்திணை தன்மைக் குறிப்பு வினைமுற்று, படர்க்கைக் குறிப்பு வினைமுற்று' எனும் அடிப்படையில் அமைந்த உயர்திணை வினைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ள தன்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

'அ∴றிணைப் படர்க்கை ஒருமை வினைமுற்று, அ∴றிணைப் படர்க்கைப் பன்மை வினைமுற்று, அ∴றிணைக் குறிப்பு வினைமுற்றுகள்' எனும் பகுப்பில் அடங்கும் அ∴றிணை வினைச் சொற்கள் நோக்கப்பட்டுள்ளன.

விரவு வினைக்கு உரிய முன்னிலை வினைமுற்றுப் பகுப்புகளான, முன்னிலை ஒருமை வினைமுற்று, முன்னிலைப் பன்மை வினைமுற்று, முன்னிலைக் குறிப்பு வினைமுற்று, வியங்கோள் வினைமுற்றுகள், செய்யும் எனும் வாய்பாட்டில் அமையும் முற்றுகள், ஐம்பால் மூவிடம் உணர்த்தும் பிற முற்றுகள், பெயர், வினை எச்சங்கள், முற்றெச்சங்கள் முதலியன திருக்குறளில் இடம்பெற்றுள்ள முறைமை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

**திருக்குறளில் இடை, உரிச்சொற்கள்** எனும் நான்காவது இயலில், சாரியைகள், அசைநிலைகள், காலஇடைநிலைகள், வேற்றுமைஉருபுகள், இசைநிறைக்கவருவன, தத்தம்குறிப்பால் பொருள் உணர்த்துவன, எண்ணிடைச்சொற்கள், உவமஉருபுகள் எனும் தொல்காப்பியப் பகுப்பினுள் அமைந்த இடைச்சொற்கள் திருக்குறளில் பயின்று வரும் முறையும், தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படாத இடைச்சொற்களாகத் திருக்குறளில் அமைந்துள்ள சொற்களும் ஆராயப்பட்டுள்ளன.

தொல்காப்பியர் சுட்டும் நூற்று இருபது உரிச்சொற்கள் திருக்குறளில் அமைந்துள்ள பாங்கு, தொல்காப்பியர் குறிப்பிடாத உரிச்சொற்கள் திருக்குறளில் பயின்று வரும் முறைமை முதலியன குறித்தும் இவ்வியல் விளக்குகிறது.

**தொல்காப்பியரின் எச்சவியல் கோட்பாடும் திருக்குறளும்** எனும் ஆறாவது இயலில், செய்யுள் ஈட்டச்சொற்கள், அவற்றின் வகைகள், செய்யுளில் சொற்கள் அடையும் விகாரம், தொகைமொழிகள் பற்றிய செய்திகள், அடுக்குத்தொடர், எச்சங்களின் வகைகள் ஆகியன குறித்துத் தொல்காப்பியர் குறிப்பிடும் கோட்பாடுகள் திருக்குறளில் பயின்றுவரும் விதம், காலமாற்றத்தினால் தோன்றும் புதிய சொற்கள், குறைச் சொற்கள் ஆகியன திருக்குறளில் அமையும் தன்மை ஆகியன குறித்த செய்திகள் விளக்கப்பெற்றுள்ளன.

**முடிவுரை** என்னும் பகுதியில் ஆறு இயல்களிலும் கண்டறிந்த முடிவுகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**துணைநூற்பட்டியல்**

முடிவுரையை அடுத்த **துணைநூற்பட்டியல்** பகுதியில், இவ்ஆய்விற்கு பயன்பட்ட முதன்மை நூல்களும், திருக்குறள் மற்றும் தொல்காப்பியத்திற்குப் பிற உரையாசிரியர்களின் உரைகள், நூல்கள், அகராதிகள், ஆய்வேடுகள், கட்டுரைகள் எனும் அடிப்படையில் அகரவரிசையில் முறையே துணைமை ஆதாரங்களும் நிரல்படத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

**பின்னிணைப்பு**

துணைநூற்பட்டியலைத் தொடர்ந்த **பின்னிணைப்பில்** ஆய்வேட்டிற்கு அரண்சேர்க்கும் வகையில் சொற்கள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பியப் பாகுபாட்டின் அடிப்படையில் குறைவான எண்ணிக்கையில் அமைந்த சொற்கள் மற்றும் பொருண்மைகள் இயலில் ஆங்காங்கே சுட்டப்பட்டுள்ளன. அதிக எண்ணிக்கையில் உள்ளவை மட்டும் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. இவ்ஆய்வேடு ஏழு பின்னிணைப்புகளை உடையதாய் உள்ளது.

**பின்னிணைப்பு ஒன்றில்,** தொல்காப்பியம் சுட்டும் வேற்றுமைப் பொருள் உணர்த்தும் வேற்றுமை உருபுகள் அமைந்து வரும் சொற்கள் பொருள்கள் அடிப்படையில் பட்டியலிடப்பட்டுள்ளன. தொகைகளாக வரும் உருபுகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு இரண்டில்,** வேற்றுமை உருபுகள் உணர்த்தும் வகைப்பாடுகளாகத் தொல்காப்பியம் சுட்டாத பொருள்களை உணர்த்துவனவாக திருக்குறளில் அமையும் வேற்றுமை உருபுகள் அவை அமையும் சொற்களுடன் இணைத்து அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளன. வேற்றுமை மயக்கங்கள் அமைந்து வரும் இடங்களும் இவ்விணைப்பில் பட்டியலிடப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு மூன்றில்** திருக்குறளில் அமைந்து வரும் பெயர்ச்சொற்கள் ஆய்வேடு சுட்டும் பாகுபாட்டின் அடிப்படையில் அகர வரிசையில் தரப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு நான்கில்** தொல்காப்பியத்தில் அமையும் வினைச்சொற்கள் திணை, இடம், காலம் என்பனவற்றின் அடிப்படையில் பகுக்கப்பட்டுப் பட்டியலிடப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு ஐந்தில்** திருக்குறளில் இடம்பெறும் இடைச் சொற்கள் தொல்காப்பியர் குறிப்பிடும் பொருள்கள் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு ஆறில்** திருக்குறளில் இடம்பெறும் உரிச்சொற்கள் தொல்காப்பியத்தில் இடம்பெறும் வரிசை அடிப்படையில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு ஏழில்** தொல்காப்பிய எச்சவியலில் சுட்டப்படும் வடசொல், விகாரங்கள், தொகைகள், அடுக்குத்தொடர், எச்சங்கள் என்பவை திருக்குறளில் இடம்பெறும் குறள் எண்களும், அவை தொடர்பான சொற்களும் பட்டியலிடப்பட்டுள்ளன.

**முடிந்த முடிபுகள்**

ஆய்வில் கண்டறியப்பட்ட சில முடிவுகள் இங்கு தரப்பட்டுள்ளன.

**தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடுகள்** என்ற இயல்வழி தொல்காப்பியரின் சொல் குறித்த கோட்பாடுகள் சொல்லின் புறவடிவம், புதைவடிவம் என்ற இருநிலைகளிலும் அமைந்துள்ளன. இம்முறைமையின் வழி தொல்காப்பியம் மொழியியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டு இயங்குவது பெறப்படுகிறது.

**திருக்குறளில் வேற்றுமைகள்** என்ற இயல்வழி இரண்டாம் வேற்றுமை வினை, வினைக்குறிப்பு எனும் இருபெரும் பொருண்மைகளில் அமைகிறது. அவற்றுள் வினைப்பொருண்மையில் அமையும் இரண்டாம் வேற்றுமை திருக்குறளில் அதிக அளவில் இடம்பெற்றுள்ளது. இரண்டாம் வேற்றுமைக்கு உரியதாகத் தொல்காப்பியம் சுட்டும் வெகுளி, அளத்தல், தொகுத்தல் எனும் பொருண்மைகள் திருக்குறளில் இடம்பெறவில்லை. ஒன்றோடு மற்றொன்று கொண்ட தொடர்பு, ஒன்றோடு மற்றொன்றைக் கூறுதல் எனும் மூன்றாம் வேற்றுமைப் பொருண்மைகள் திருக்குறளில் புதிதாக அமைந்துள்ளது.

தொல்காப்பியம் சுட்டாத பொருட்டு எனும் சொல் நான்காம் வேற்றுமை உருபாகத் திருக்குறளில் அமைந்துள்ளது. இன்ன பாகுபாடு என வகைப்படுத்த இயலாத பலவிதப் பாகுபாடுகளைத் திருக்குறளில் இடம்பெறும் நான்காம் வேற்றுமைகள் பெற்றுவருவது எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே என்ற தொல்காப்பியக் கோட்பாட்டுடன் பொருந்தி அமைகிறது. ஐந்தாம் வேற்றுமை உருபாகிய ‘இன்’ பிற்காலத்தில் உவமப் பொருளுணர்த்தும் இடைச்சொல்லாக வளர்ச்சி பெற்றது. இலக்கியங்களில் இன் உருபின் பயன்பாடு ஒப்புப்பொருளில் அதிகரித்தது இதற்கான காரணம் எனலாம். திருக்குறளில் ஐந்தாம் வேற்றுமைக்குரிய இன் உருபு பெரிதும் ஒப்புப் பொருளில் இடம்பெற்றுள்ளது இக்கருத்திற்கு அரண் செய்கிறது.

‘இல், வயின், முகம், பால்’ ஆகிய தொல்காப்பியம் சுட்டாத உருபுகள் ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருள் உணர்த்துவனவாகத் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. அறத்துப்பால், பொருட்பால் முழுவதுமாக விளிவேற்றுமை ஓரிடத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளது. காமத்துப்பாலில் அதிகமான விளி வேற்றுமைகள் இடம்பெற்றுள்ளன. அகக் கூற்றுக்களில் விளி இடம்பெறுவது இயல்பு என்பதால் திருவள்ளுவர் காமத்துப்பாலில் அதிகமாக விளியைக் கையாண்டுள்ளார் எனலாம்.

வேற்றுமைகள் விரியாக இடம்பெறும் இடங்களை விடத் தொகையாக இடம்பெறும் இடங்கள் திருக்குறளில் அதிகம் உள்ளன. அவற்றுள்ளும் இரண்டு மற்றும் ஆறாம் வேற்றுமைகள் பெரிதும் தொகையாக இடம்பெற்றுள்ளன.

**திருக்குறளில் பெயர்ச்சொற்கள்** என்ற இயல்வழி திருக்குறளில் இடம்பெறும் உயர்திணைப் பெயர்களுள், யாவர் - யார்: யான் - என்: யாம் - எம்: நாம் - நம்: என்றவாறு தொல்காப்பியர் சுட்டும் பெயர்களின் திரிந்த வடிவத்தையும் காண இயலுகிறது. திருக்குறளில் உயர்திணை பலர்பால் பெயரின் பின் ‘கள்’ விகுதி இடம்பெறுவது இன்றைய வழக்கை ஒத்ததாக அமைகிறது. உகரத்தை முதலாகக் கொண்ட உயர்திணை மற்றும் அஃறிணைப் பெயர்கள் திருக்குறளில் இடம்பெறவில்லை.

சினைமுதற்பெயர் என்ற அடிப்படையில் அமைந்த விரவுப்பெயர்கள் திருக்குறளில் இல்லை. தொல்காப்பியராலும், உரையாசிரியர்களாலும் சுட்டப்படாத, இருமடி ஆகுபெயர், எண்ணாகுபெயர், காலவாகுபெயர், தூளியவாகுபெயர், தானியாகுபெயர் என்பவவை திருக்குறளில் இடம்பெற்றுள்ளன எனலாம்.

**திருக்குறளில் வினைச்சொற்கள்** என்ற இயல்வழி, அள், ஆள் விகுதி பெற்ற பெண்பால் வினைமுற்றுச் சொற்கள் திருக்குறளில் அறத்துப்பால் மற்றும் பொருட்பாலில் இடம்பெறவில்லை என்பதை அறியமுடிகிறது. மார் ஈற்று

வினைமுற்றுகள் திருக்குறளில் இடம்பெறவில்லை. இதிலிருந்து இவ்விகுதியின் பயன்பாடு திருக்குறள் காலத்தில் வழக்கொழிந்ததை அறியமுடிகிறது.

வினையெச்சங்களுள் செய்து எனும் வாய்பாட்டில் அமைந்த வினையெச்சங்கள் திருக்குறளில் அதிகமாக இடம்பெற்றுள்ளன. எவன் என்ற அ∴றிணைக் குறிப்பு முற்றுச் சொல், என், என்னை, என்ன ஆகிய திரிந்த வடிவங்களுடன் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. உண்டு எனும் வினைமுற்று வடிவம் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. இதனை அடியொற்றியே நன்னூல் இந்த வினைமுற்று வடிவத்தைச் சுட்டுகிறது எனலாம்.

முன்னிலை வினைகள் காமத்துப் பாலில் அதிகம் இடம்பெற்றுள்ளன. உரையாடல் இடம்பெறும் இடம் காமத்துப்பாலே என்பதால் முன்னிலை வினைகள் இங்கு இடம்பெற்றுள்ளன எனலாம்.

**திருக்குறளில் இடை, உரிச்சொற்கள்** என்ற இயல்வழி அசைநிலைப் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் திருக்குறளில் குறைந்த அளவில் இடம்பெற்றிருப்பதை அறியமுடிகிறது. இதிலிருந்து பொருளற்ற சொற்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் வள்ளுவரின் கோட்பாடு புலனாகிறது. இடைச்சொற்களுள் உம் இடைச்சொல் திருக்குறளில் அதிகமாக இடம்பெற்றுள்ளது.

ஆங்கு, ஆம், ஆல், ஓரும், தான், போல் எனும் அசைநிலைப் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்: அம், துணை எனும் பண்பு குறித்த இடைச்சொற்கள்: கில் எனும் சாரியை இடைச்சொல்: தான், பின்றை, வெய்து, இன்னும், ஏனை, ஒருங்கு, ஒல்லை, இனி, முன்னம், தோறும் என்ற தத்தம் குறிப்பில் பொருளுணர்த்தும் இடைச்சொற்கள்: ஒடு, ஒன்றோ எனும் எண்ணிடைச்சொற்கள்: ஊங்கு எனும் உவம இடைச்சொல் ஆகியன திருக்குறளில் புதிதாகப் பயின்று வந்துள்ளன.

தொல்காப்பியம் சுட்டாத சால, மா எனும் உரிச்சொற்கள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. இவற்றைப் பின்னைய இலக்கண நூலான நன்னூல் குறிப்பிடுகிறது. விருப்பம் எனும் பொருள்தரும் மாதர் என்னும் உரிச்சொல்லைப் பெண்களைக் குறிக்க வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறான பொருண்மை மாற்றம் இன்றைய வழக்கிலும் தொடர்ந்து வருவது எண்ணத்தக்கதாகும்.

கெழு – உரிமை: செல்லல் - வறுமை: இன்னல் - தீமை: இசைப்பு – புகழ், சொல்: சாயல் - மேனியழகு: ஆய்தல் - ஆராய்தல்: வெம்மை – கொடுமை: வறிது – வறுமை: எற்று – எத்தன்மைத்து: பிணை - இணைப்பு: தா – குற்றம்: இரங்கல் - கவலை: ஒற்கம் - தளர்ச்சி: சேர் - இணைதல், செறிதல், கூடுதல் என்பவையும் தொல்காப்பியத்திலிருந்து மாறுபட்ட பொருளில் இடம்பெற்றுள்ளன.

**தொல்காப்பியரின் எச்சவியல் கோட்பாடும் திருக்குறளும்** என்ற இயல்வழி, திருக்குறளில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடர்கள் அனைத்தும் பொருள்நிலையில் வந்திருப்பதை உணரமுடிகிறது. தொல்காப்பியத்தில் சுட்டப்படாத வினைத்தொகைப் புறத்துப் பிறக்கும் அன்மொழித்தொகைகள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பிய உரையாசிரியர்களும், பின்னைய இலக்கண நூல்களும் இவ்வகையைத் தனித்துச் சுட்டுவதற்குத் திருக்குறள் அடிப்படையாக அமைந்தது எனலாம்.

அவையல் கிளவி திருக்குறளில் ஓரிடத்தில் மட்டும் இடம் பெற்றுள்ளது. செய்யுளுக்கு உரியதாகத் தொல்காப்பியம் சுட்டும் திசைச்சொற்கள், வடசொற்களின் பயன்பாடு திருக்குறளில் குறைந்த அளவு இடம்பெற்றிருப்பதில் இருந்து அனைவருக்கும் புரியும் தகுமொழியில் இலக்கியம் அமைய வேண்டும் என்ற வள்ளுவரின் கோட்பாடு புலனாகிறது.

**கண்டறிந்தவை**

தொல்காப்பியர் சுட்டும் சொல்இலக்கணக் கோட்பாடுகளுக்குப் பெரிதும் பொருந்தி வருவதாகத் திருக்குறள் அமைகிறது. தொல்காப்பியக் கோட்பாடுகளில் இருந்து திருக்குறள் வேறுபடும் இடங்கள் பலவும் பின்னைய இலக்கண மாற்றம் - இலக்கண வளர்ச்சிக்கு அடித்தளமாகின்றன என்பதை அறியமுடிகிறது.

வேற்றுமைகள் உணர்த்தும் பொருள்களின் பின்னைய வளர்ச்சி நிலையைக் குறள் வழி அறிய இயலுகிறது. ஒருவரைத் தனித்துச் சுட்டும் இயற்பெயராக இந்திரன் என்ற ஒரு சொல் மட்டும் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது. இதுவும் அப்பதவிக்குரிய பெயர் என்பதால் பொதுப்பெயராகக் கருதலாம். அவ்வாறெனில் இயற்பெயர்கள் திருக்குறளில் இடம்பெறவில்லை. அகமரபுக்குரியதாகத் தொல்காப்பியம் சுட்டும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் என்பதை வள்ளுவர் உலகப்பொதுமறையாம் திருக்குறளிலும் கையாண்டுள்ளார் எனலாம். பின் தோன்றிய நீதி இலக்கியங்களிலும் இம்மரபு பின்பற்றப்பட திருக்குறள் முன்னோடியாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

அற்று எனும் குறிப்பு முற்றின் முன்சொல் வினையெச்சம், வினையாலணையும் பெயர் என்பதாக அமைவதோடு தொழிற்பெயராகவும் அமையலாம் என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. செய்யும் எனும் முற்று அ∴றிணைக்கு உரியதாக மாற்றம் பெற்ற பிற்கால வழக்குக்கான அடிப்படையைத் திருக்குறளில் காண இயலுகிறது. செய்யும் எனும் முற்று அ∴றிணைக்கு உரியதாக மாற்றம் பெற்ற பிற்கால வழக்குக்கான அடிப்படையைத் திருக்குறளில் காண இயலுகிறது. திருக்குறளில் அன் ஈற்று உயர்திணைச் சொற்கள் பெயர், வினை என்ற இரு நிலைகளிலும் குறைவாக இடம்பெற்றுள்ளது என்பதிலிருந்து **சங்கம் மருவிய காலத்திற்கு முன் தோன்றியது குறள்** என்ற கருத்து வலிமை பெறுகிறது எனலாம்.

செய்யுளுக்கு மட்டும் உரியதாகி அனைவராலும் பொருள் கொள்ள முடியாத உரிச் சொற்களின் பயன்பாடு திருக்குறளில் குறைந்த அளவில் இடம்பெற்றுள்ளது. இதிலிருந்து அனைவரும் புரிந்து கொள்ளக்கூடிய சொற்களைத் தன் இலக்கியத்தில் பயன்படுத்த வேண்டும் என்ற திருவள்ளுவரின் புலப்பாட்டு நெறிக்கோட்பாடு புலனாகிறது.

**பரிந்துரை**

திருக்குறளில் இடம்பெற்றுள்ள வினையாலணையும் பெயர்கள், தொழிற்பெயர்கள், செய்யும் எனும் முற்றுகள், உரிச்சொற்களின் வடிவங்கள், சாரியைகள், திரிசொற்கள், எச்சங்கள் முற்றுப் பெறும் சொற்கள், இசையெச்சம் முதலியவை பற்றி விரிவான ஆய்வுகளைத் தனிததனியே செய்ய இடமுண்டு. தொல்காப்பியச் சொல்இலக்கணக் கோட்பாடுகளில் இருந்து திருக்குறள் வேறுபடும் இடங்கள் தமிழ் இலக்கண மரபு வளர்ச்சிக்கு வித்திடும் முறைமை என்ற நோக்கிலும் ஆய்வு செய்யலாம். இவை தவிர, தொல்காப்பியரின் சொல்இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஏனைய இலக்கியங்களையும் நோக்கலாம்.